பதி. எண்: எ. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil D.i y
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 16உ (1–8–67) செவ்வாய் ★ வெளியூர்: ஆடி 17உ (2 8–67) புதன் [இதழ்: 41

முதலமைச்சர் நிதி

ரூ. 11 இலட்சத்தைத் தாண்டியது!

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு ஜூலை 29-ம்நாள் கிடைத்த தொகை ரூ. 72,590.45; இத்துடன் மொத்தம் ரூ. 11,16,242.44 சேர்ந்துள்ளது.

திட்டத்தைக் கைவிட முயன்றால் கடும் விளைவுகள்

டில்லிக்கு அன்பழகன் எச்சரிக்கை

அமைச்சரின் விநோதக் கூற்று— உறுப்பினர்கள் வியப்பு

புதுடில்லி, ஜூலை 31—

"மத்திய அரசு சேலம் உருக்காலைத் திட்டத்தை மறுப்பதன் மூலம், தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தைப் புண்படுத்திவிட்டது.

"தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் பற்றிய அரசின் நிச்சயமற்ற கொள்கையின் விளைவாக, ஏற்கனவே வெந்த புண்ணில் வேல்கொண்டு பாய்ச்சுகிறது அரசு!

"இந்தத் திட்டம், அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாகும்; நிதிப் பற்றுக் குறை, இத்திட்டத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது.

"தூத்துக்குடித் திட்டத்தால் ஏற்படக்கூடிய நன்மைகளை, வேண்டுமென்றே ஓர் அதிகாரி, குறைத்து மதிப்பிட்டிருக்கிறார். இந்தத் திட்டம் குறித்து ஏற்கனவே ஆராய்ந்த குழுவிடம் உள்ள காழ்ப்புக் காரணமாக, அந்த அதிகாரி இவ்வாறு செய்திருக்கிறார்.

"இந்தத் திட்டத்துக்காக இந்த ஆண்டில் செலவிட ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 5-கோடியை, ரூ. 1-கோடியாகக் குறைத்தது வருந்தத்தக்கது.

"தூத்துக்குடித் திட்டத்தை நிறைவேற்றப் போதுமான பணம் ஒதுக்குவதில் மத்திய அரசுக்கு இடையூறு இருக்குமானால், இந்தத் திட்டத்துக்காக ஜப்பானிய அரசாங்கம் தர முன்வந்துள்ள கடனை ஏற்றுக்கொள்ள வேண்டும்"

என்று, மக்களவையில், திரு. க. அன்பழகன் அவர்கள், வலியுறுத்திக் கூறினார்.

அமைச்சரின் கூற்று

"தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தை மத்திய அரசு கைவிட முயலுகிறது" என்ற தி. மு. கழக உறுப்பினர்களின் குற்றச்சாட்டை, போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் பலமாக மறுப்பதற்கு முயன்றார்.

இதுகுறித்து அமைச்சர் கூறியதாவது:—

"திட்டம் பற்றி நான் தமிழக முதலமைச்சரிடம் விவாதித்தேன். ஏற்கனவே இந்த ஆண்டுக்கு ஒதுக்கியிருந்த ரூ. 50 இலட்சம், ஒரு கோடி ரூபாயாக மத்திய அரசால் உயர்த்தப்பட்டிருக்கிறது.

திட்டத்தை ஒப்புக்கொள்ளுவதற்கோ, செய்து முடிப்பதற்கோ அடிப்படையான எந்தத் தடையும் இல்லை; ஆனால், சில நடைமுறைகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்துடன், சேதுக்கடல் திட்டத்தையும் சேர்த்துக் குழப்பவேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

வேடிக்கை - விநோதம்!

மேலும் அமைச்சர், தாம் போக்குவரத்து அமைச்சராகப் பதவி ஏற்றபோது, தூத்துக்குடித் திட்டம் கொள்கையளவில ஒத்துக்கொள்ளப்பட்டதாகக் கண்டதாகவும், ஆனால் திட்டம் அனுமதிக்கப்பட்டிருககவில்லையென்றும், பண ஒதுக்கீடு நேரத்தில், எங்கோ சிலர்—யாரோ சிலர் திட்டத்தை அனுமதிக்க மறந்துவிட்டிருக்கின்றனர் என்றும் கூறியபோது, கழக உறுப்பினர்கள், 'விநோதம்தான்; அதன் உண்மை என்ன?' என்று குரலெழுப்பினர்.

"பொருளாதார நெருக்கடியிருந்தும், முன்னைய காங்கிரசு அரசால் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், ஒவ்வொரு முனையிலும்—அதன் பொருளாதார நன்மையும் போக்குவரத்து வசதிகளும் ஆராயப்பட்டன; அப்பொழுதெல்லாம் கூட, திட்டம் நிறுத்திவைக்கப்படவில்லை; அதனால்தான் மேற்கொண்டும் ரூ. 50 இலட்சம் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்றும் அமைச்சர் கூறினார்.

அன்பழகன் எச்சரிக்கை

இது குறித்து அரை மணி நேரம் விவாதிக்க வேண்டுமென்று கோரிய தி. மு. க. குழுத் தலைவர் க. அன்பழகன் அவர்கள் பேசியதாவது:—

"போக்குவரத்து அமைச்சுத் துறை இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தயங்குகிறது!

"இத்திட்டத்தை வெறும் வணிக அடிப்படையில்மட்டும் அணுகக் கூடாது. அந்த வட்டாரத்தின் வளர்ச்சியைக கருதி இதைச் செயல்படுத்த வேண்டும். இத்திட்டத்தைக் கைவிடுவதற்கான எந்த முயற்சியும் தமிழகத்தில், கடுமையான விளைவுகளை உண்டாக்குமென எச்சரிக்கிறேன்."

காங்கிரசு உறுப்பினர் ஆதரவு

ரந்திர் சிங் என்ற காங்கிரசு உறுப்பினரும் தூத்துக்குடித் திட்டக் கோரிக்கைக்கு ஆதரவு காட்டினர்.

பி. இராமமூர்த்தி

இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் பி. இராமமூர்த்தி பேசுகையில், 'தூத்துக்குடித் திட்டத்தின் பொருளாதார வலிவு குறித்து அரசு குறிப்பாக ஆராய்ந்ததா-அல்லது பொதுவாக நாட்டுப் பொருளாதாரத்தின் முன்னேற்ற அடிப்படையில் மேற்போக்காக ஆராய்ந்ததா என்பது குறித்து அமைச்சர் நேரடியாக விடையளிக்க வேண்டும்' என வற்புறுத்தினர்.

மேலும் அவர், 'திட்டத்தின் பொருளாதார அம்சம் குறித்துப் பேசிக் கொண்டிருப்பது, திட்டத்தைத் தள்ளிப்போடுவதற்கான முயற்சியாகும்' என்றும் குற்றஞ் சாட்டினர்.

திட்டம் பற்றி ஆராய,குழுவுக்குப் பிறகு குழுவாக அமைத்துக் கொண்டுவரும் மத்திய அரசின் போக்கை, திரு. அன்பழகன் அவர்களும்,இராமமூர்த்தி அவர்களும் கண்டித்தனர்.

செ. கந்தப்பன்

கழக உறுப்பினர் செ.கந்தப்பன், 'ஒரு குழுவின் முடிவு மீது தீர்ப்பளிக்க இன்னொரு குழுவை அமைக்கவேண்டிய அவசியம் என்ன?' என்று வினவினர்.

வி. கிருஷ்ணமூர்த்தி

கழக உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி பேசுகையில், சேதுசமுத்திரத் திட்டத்துடன் தூத்துத்குடித் துறைமுகத் திட்டமும் செயல்படுத்தப்படவேண்டும்' என்று வற்புறுத்தினர்.

இந்தியாவிலேயே முதல் நிகழ்ச்சி

சென்னை மாநகராட்சியின் பாட நூல் வழங்கு விழா

சென்னை, ஆக. 1—

சென்னை மாநகராட்சி மன்றத்தின் இலவசப் பாடநூல் வழங்கு திட்டத் துவக்க விழா ஆக. 4-ஆம் நாள் நடைபெறவிருக்கிறது.

அன்று மாலை 4-மணிக்கு நடைபெறும் இவ்விழாவுக்கு தமிழகக் கல்வியமைச்சர் திரு. இரா.நெடுஞ்செழியன் தலைமை வகிக்கிறார். முதலமைச்சர் அறிஞர் அண்ணா திட்டத்தைத் துவக்கிவைக்கிறார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக எல்லாப் பள்ளிப் பிள்ளைகளுக்கும் இலவசமாகப் பாடநூல் வழங்க முன்வந்திருப்பது நமது சென்னை மாநகராட்சிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவில் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்கிறார்கள். அவர்களுக்காக, தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையின் 80 பஸ்களை ஒதுக்க அமைச்சர் கருணாநிதி இசைந்திருப்பதாக மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் வி. முனுசாமி அறிவிக்கிறார்.

டில்லியிடமிருந்து நியாயம் கிடைக்கப் பாடுபடுக!

வெங்கட்ராமனுக்கு அண்ணா அறிவுறுத்தல்

"எவரும் தான் பிறந்த மண்ணை மறப்பது கூடாது; வெங்கட்ராமனும் மறக்கமாட்டார் என்றே நம்புகிறேன். இந்த மண்ணோடுள்ள உறவுதான் நின்று நிலைத்திருக்கக் கூடியதாக இருக்கும்.

"தமிழ்நாட்டின் தேவைகளையும் அவசியங்களையும் உணர்ந்துள்ள அவர், இதுகாறும் ஏற்பட்ட தவறுகளைச் சரி செய்து, தமிழகத்துக்கு நீதி கிடைத்திடச் செய்யவேண்டும்.

"தமிழகத்தைச் சேர்ந்த நாம் கொடுத்துப் புகழெய்தியவர்கள்—வாங்கிப் பழகியவர்கள் அல்லர்! நாம் கேட்பது பொருளாதார நியாயமே—அரசியல் நியாயம் கோரவில்லை!

"இயற்கைக் கனிப் பொருள்கள் கிடைக்குமிடத்தில் தொழில்கள் துவக்கப்பட வேண்டுமென்ற கோட்பாடே கல்லூரிப் பொருளாதார வகுப்பில் படித்திடும் ஆரம்பப் பாடம்; இந்த வகையில்தான், சேலம் உருக்காலைத் திட்டத்தை வலியுறுத்துகிறோம்.

"ஒருவர் புகழெய்திவிடுகிறார் என்பதால், இந்த ஆரம்பப் பொருளாதாரப் பாடத்தை மறந்துவிட இயலுமா?

"இதே வகையில்தான் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் பற்றியும் வலியுறுத்துகிறோம்.

"நாட்டின் வரலாற்றில் பரபரப்பானதொரு காலம் இது! இந்தியாவின் கூட்டமைப்பு அரசியல், பல்வேறுபட்ட கட்சிகளின் ஆட்சிகள்—ஆங்காங்கு அமைந்துள்ளதால்—இயங்க முனைந்துள்ள காலம் இது! இத்தகைய நேரத்திலே வெங்கட்ராமன் டில்லி செல்கிறார்.

"பல்வேறு கட்சிகளிடையேயும் ஒன்றுபட்ட உணர்வையும், தோழமையையும் உருவாக்குவதில் அவர் பணி அவசியப்படும்!

"நாம், நமது குறிக்கோள்களில்—நமது அரசியலில் உறுதி உடையவர்களாக இருக்கிறோம்! அரசியல் நிலைத்த தன்மையும், உண்மை உணர்வும் இங்கு மிகுந்துள்ளது! மற்றவர்கள் நம்மிடமிருந்து பெறவேண்டிய பாடங்களில் இதுவும் ஒன்று!

"இதையெல்லாம் நான் கூறக் காரணம், நண்பர் வெங்கட்ராமனிடம் இந்த குணங்கள் நிரம்ப உண்டு'என்பதாலேயேயாகும். இந்தக் குணங்கள் எங்கு தேவைப்படுகின்றனவோ அந்த இடத்துக்கு ;வழங்குகிறோம்—வெங்கட்ராமனை அங்கு அனுப்புவதன் மூலம்!

"அவர்களிடமிருந்து நாம் பெறுவதெல்லாம் இங்கிருந்து அவர்கள் வரியாக எடுத்துச் சென்றதில் ஒரு பகுதியே!

"நான் இனி ஒவ்வொரு மாதமும் கையிலே ஒரு பட்டியலோடு டில்லியில் வெங்கட்ராமன் அறைக் கதவைத் தட்டுவதாக இருக்கிறேன்; 'அப்படித் தட்டத் தேவையில்லை; கதவு திறந்தே இருக்கும்" என்கிறார் வெங்கட்ராமன்!

"கதவு திறந்தே இருந்தாலும், தட்டிவிட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டும்' என்பது ஆங்கிலேய முறை!

"நாம் கொடுக்கும் திட்டங்களை திட்டக் குழுவின் சக உறுப்பினர் முன்வைத்து நமக்கு நியாயம் கிடைக்கச் செய்வார் என்று நம்புவோமாக!"

—முதலமைச்சர் அண்ணா

(ஆபட்ஸ்பரியில் நடந்த பாராட்டு விழாவில்)

அரசுடைமையாகும் முதல் பஸ்

முதலமைச்சர் அண்ணா துவக்கிவைத்தார்

சென்னை, ஆக. 1—

75 மைலுக்கு மேல் தொலைவுள்ள பஸ் தடங்களையெல்லாம் அரசுடைமையாக்குவது என்ற தமிழக அரசின் கொள்கைக்கேற்ப இன்று முதன்முதலாக சென்னைக்கும் ஆரணிக்குமிடையே அரசு பஸ் ஓடத் துவங்கியது.

இன்று காலை முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் முதல் பஸ்சை துவக்கிவைத்தார்.

பொதுப்பணித்துறை யமைச்சர் மு. கருணாநிதி அவர்களும் விழாவில் பங்குகொண்டார்.

வாழ்நாளிலேயே மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி!

முன்னர் எதிர்த்தவர்களும் இன்று ஆதரிப்பது வரவேற்கத்தக்கது!

'தமிழ்நாடு' பெயர் சூட்டக் கோரும் தீர்மானம் -- அண்ணா விளக்க உரை

" அரசியல் சட்டத்தில் 'மதராஸ் ஸ்டேட்' (சென்னை ராஜ்யம்) என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இழிநிலையை நீக்கும் வகையில், தமிழ்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயரே இருக்கும்படியாக அரசியல் சட்டத் திருத்தத்தைத் திருத்த வேண்டும்'' என்று டில்லி அரசை வற்புறுத்தும் தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டுவரப் பட்டபோது, அதன்மீது நடைபெற்ற விவாதங்களுக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் முழுவிவரம் இங்கு தரப்படுகிறது.

இத்தீர்மானத்தை எல்லாக் கட்சியினரும் ஒருமுகமாக ஏற்றுக் கொண்டதும், தீர்மானம் நிறைவேற்றப்படுகையில் அண்ணா அவர்கள், 'தமிழ்நாடு' என்று மும்முறை கூற, மற்ற அனைத்து உறுப்பினர்களும் 'வாழ்க' என முழங்கியதும் நினைவிருக்கலாம்.

நெடுங்கால நினைவு இன்று நிறைவேறுகிறது

இந்த மன்றத்திலே எல்லாக் கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற இருக்கின்ற 'தமிழ்நாடு' என்ற பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி, இந்த அவையிலே இன்றையத்தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும் நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும்.

இந்தத் திருநாளினைக் காண்பதற்குப் பன்னெடுங்காலம் காத்துக் கொண்டிருக்க நேரிட்டதே என்பதுதான் மகிழ்ச்சியின் இடையிலே நமக்கு வருகின்ற ஒரு துயரமே தவிர, நெடுங்காலத்திற்கு முன்னாலே நடைபெற்றிருக்கவேண்டிய ஒரு நிகழ்ச்சியை, மிகுந்த காலம் தாழ்த்தி இன்றையத்தினம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்றாலும், இதிலே எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் தங்களுடைய ஆதரவைத் தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

சட்டத்தைத் திருத்துவதில் தயக்கம் இருக்காது

எதிர் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள்கூட, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறார்களே தவிர—'அதிலே சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறோம்' என்று சொல்லியிருப்பது, எதிர்க் கட்சியில் இருப்பவர்களுடைய கடமை என்ற வகையில் ஆலோசனைகளைச் சொல்ல வேண்டுமென்ற முறையிலேயே தவிர, 'எதிர்க்கிறார்கள்' என்று இல்லை. ஆகையினால் இந்தத் தீர்மானம், எல்லோருடைய ஆதரவையும் பெற்று இந்தியப் பேரரசுக்கு அனுப்பிவைக்கப்பட இருக்கிறது.

இந்தியப் பேரரசிலே மிகுந்த செல்வாக்கோடு இருக்கின்ற இரண்டொரு தலைவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைத்த போது, அவர்கள், 'தமிழகச் சட்டமன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே தயக்கம் இருக்காது' என்பதனை முன்கூட்டியே என்னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நல்லதோர் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது!

அதனை, 'அரசை நடத்துகிறவர்கள் கூட ஏற்றுக்கொள்ளுகிறார்கள்' என்ற எண்ணத்தக்கவிதத்தில், பாராளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப்பற்றிப் பேசவேண்டிய வாய்ப்புக் கிடைத்த நேரத்தில், உள்துறை அமைச்சர் சவான் 'மெட்ருஸ் ஸ்டேட்' என்று பேசிப் பழக்கப்பட்டவரானாலும், மிகுந்த அக்கறையோடும்—மிகுந்த கவனத்தோடும் 'Tamil Nadu' என்றுதான் பேசியிருக்கிறார்; ஆக, இதை அவர்களும் ஏற்றுக்கொண்டு, அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை இன்றையத்தினம் இந்த அவையிலே பெற்றிருக்கிறோம்.

யாருக்கு வெற்றி?

'திராவிட முன்னேற்றக் கழகம்' என்பதிலே 'திராவிட' என்பதை இணைத்துக்கொண்டிருப்பதாலே 'தமிழ்நாடு' என்பதிலே அக்கறை இல்லாமல்போய்விடுமோ என்று சிலர் எண்ணிய நேரத்தில், 'தமிழ்நாடு' என்று பெயரிடுதல் வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்திவந்துகொண்டிருக்கிறோம்.

காங்கிரசுக் கட்சியிலுள்ளவர்களும், 'மற்றவர்கள் கொண்டு வருகிறார்களே' என்பதனாலே, முன்னாலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும்—'இலக்கியத்தில் ஆதாரம் இருக்கிறதா' என்று கேட்டிருந்தாலும், இன்றையதினம் அவர்களும், 'தமிழ்நாடு' என்று சொல்லிக்கொள்வதில் மிகுந்த பெருமைப்படுகிறார்கள். ஆகையினால் இந்தத் தீர்மானம், எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாமல் இந்த அவையிலே நிறைவேற்றப்பட இருக்கிறது என்று கருதுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு வெற்றி கிடைக்குமானால், அது இன்று கழகத்திற்கு வெற்றியல்ல—தமிழரசுக்கழகத்திற்கு வெற்றியல்ல—மற்றக் கட்சிகளுக்கு வெற்றியல்ல; இது, தமிழுக்கு வெற்றி—தமிழருக்கு வெற்றி—தமிழ் வரலாற்றுக்கு வெற்றி—தமிழ் நாட்டுக்கு வெற்றி—என்ற விதத்தில் அனைவரும் இந்த வெற்றியிலே பங்குகொள்ள வேண்டும்.

சிக்கல்கள் எழுவதற்கு நியாயமே இல்லை!

'தமிழ்நாடு' என்ற பெயர் இருந்தால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்துகொள்ளமாட்டார்கள் என்று சொன்னதுடன் மட்டுமல்ல — முன்பு தொழில் அமைச்சராக இருந்த வெங்கட்ராமன் அவர்கள், 'ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே செய்துகொள்ளக் கூடிய ஒப்பந்தம் எல்லாம் திருத்தி எழுதப்பட வேண்டிவரும்; அதனால் சிக்கல்கள் விளையும்' என்றெல்லாம்கூடச் சொன்னார்கள்; அதிலிருந்து அவர்கள், வெளிநாடுகளுக்கெல்லாம் போய்வந்தார்கள் என்பதைத்தான் கவனப்படுத்துகிறார்களே தவிர, உண்மையாகச் சிக்கல்கள் இருக்கிறதா என்பதைக் கவனப்படுத்தவில்லை.

'கோல்டு கோஸ்ட்' என்பது, 'கனா' ஆகிவிட்டது; அதனால் எந்த விதமான சர்வதேசச் சிக்கல்களும் ஏற்பட்டு விடவில்லை!

தமிழ்நாடு தனி நாடாகி இந்தப் பெயரை இடவில்லை; இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்துகொண்டு இந்தப் பெயரை இடுவதால், இதிலே சர்வதேசச் சிக்கல்கள் எழுவதற்கு நியாயம் இல்லை!

ஆகவே, இந்தத் தீர்மானத்தை அனைவரும் தங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டுமென்பதை ஒரு கடமையுணர்ச்சியாகக் கொண்டதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்நாள் முழுவதும் பெருமைப்படும் பணி

'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்திற்காகத் தன்னைத்தானே தியாகம் செய்துகொண்ட சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும்—என்று இங்கு குறிப்பிடப்பட்டது. அதையும், அத்தனைபேரும், உள்ளத்திலே — கருத்திலே கொள்ளுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய எண்ணங்கள் இன்றையத்தினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும், அந்த நிலையை உருவாக்குவதிலே நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும் நமக்கெல்லாம், நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படத்தக்க பணியாகும்.''

அழிக்க இயலாத நிலையான செல்வம்!

" மாணவர்களிடையே வேகம் தேவைதான்; அது ஏற்படுவதும் இயற்கைதான்; என்றாலும், அந்த வேகம் வகைப்படுத்தப்பட வேண்டும்—முறைப்படுத்தப்பட வேண்டும்.

" கல்வியின் தன்மையே வேகத்தை முறைப்படுத்தி வகைப் படுத்துவதுதான்; நம்முடைய மாணவர்களுக்கு அப்படிப் பட்ட வேகம் இருந்தாலும், மொத்தத்தில் நல்ல மாணவர்களாக இருக்கிறார்கள்!

" நீங்களெல்லாம் பெரியவர்களாகி, நல்ல மருத்துவர்களாக—கீர்த்தி பெற்ற வழக்கறிஞர்களாக—நேர்த்தி வாய்ந்த நிர்வாக நிபுணர்களாக விளங்க வேண்டும். இங்கே படித்தவர்கள் அப்படிப்பட்ட நல்ல முன்னேற்றமுள்ளவர்களாக இந்தியாவின் பல பகுதிகளிலும் விளங்கியிருக்கிறார்கள். அந்த வழி வகையைக் கட்டிக்காத்திடும் வகையில், வழக்கறிஞர்களானால் நல்ல வழக்கறிஞர்களாக—மருத்துவர்களானால் நல்ல மருத்துவர்களாக—நல்ல பொறியியல் வல்லுநர்களாக—நிர்வாக நிபுணர்களாக—நல்ல விஞ்ஞானிகளாக நீங்கள் வடிவெடுக்க வேண்டும்.

" நீங்கள் கேட்கக்கூடும் — வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள் என்ற பட்டியலில் மந்திரியை ஏன் சேர்க்கவில்லை என்று!

" அந்தச் செல்வம் நம்முடைய நாட்டிலே போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால்தான், புதிய தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்றால் அமெரிக்க நாட்டின் நிபுணர்களையும், இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகளையும், இரஷ்ய நாட்டுப் பொறியியலாளர்களையும், தருவிக்கிறோம்!

" கல்வித் துறைதான் இத்தகைய வாய்ப்புக்களைத் தரும் அறிவுத் துறையாகும்; அத்தகைய வாய்ப்புக்களைப் பெற்று நல்ல நிலையை உருவாக்கித் தரும் பெரும் பொறுப்பு உங்கள் கரங்களிலேதான் இருக்கிறது! அதற்கான அறிவும் ஆற்றலும் உங்களிடம் நிறைய இருக்கிறது! அப்படிப்பட்ட உன்னத மரபில் பிறந்தவர்கள் நாம் என்பதை உணர்ந்தால் இயற்கையாகப் பெற்ற திறனோடு ஆசிரியர் தரும் பயிற்சியின் துணை கொண்டு முதல்தர குடிமகனாகத் திகழ முடியும்!

" நானும் என்னைப் போன்ற நண்பர்களும் மாணவர்களாக இருந்த காலத்தைவிட இப்போது நீங்கள் வாழும் காலத்தில் தமிழுக்கு நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது! அந்த அளவுக்குத் தமிழுக்கு நல்ல ஏற்றமும் ஆக்கமும் ஏற்பட்டிருக்கிறது!''

—அறிஞர் அண்ணா

(குடந்தை அரசினர் கலைக் கல்லூரித் தமிழ் மன்றத் துவக்க விழாவில்)

ஆறு திங்களில் கழக ஆட்சியினர் சாதனை கேளீர்!

தொழிலாளர் தெரிவித்த கோரிக்கை-- நிறைவேற்ற மறுத்தனர் அன்றைய அமைச்சர்கள்!

நாங்களே தொழிலாளரிடம் சென்று குறைகளைக் கேட்கிறோம் இன்று!

மேயர் குழு பாராட்டு விழாவில் அமைச்சர் கருணாநிதி உரை

சென்னை, ஜூலை 31—

" காங்கிரசார் வெற்றி பெற்று மீண்டும் பதவிக்கு வந்திருப்பார்களானால், எப்படிப்பட்ட கார்களை வாங்க இருந்தார்கள் என்கிற பட்டியல் தெரியுமா? எந்தெந்தக் கார்களில் பவனி வர இருந்தார்கள் தெரியுமா?

" அறிஞர் அண்ணா அமைச்சரவை பதவியேற்றதும், புதிய கார் வாங்கும் திட்டத்தை ரத்து செய்துவிட்டதுடன், இருக்கின்ற பெரிய கார்களையும் அமைச்சர் யாரும் பயன்படுத்தக்கூடாது என்று கூறிவிட்டார்கள்; 'சொந்தக் கார் உள்ள அமைச்சர்கள் சொந்தக் காரிலும், மற்ற அமைச்சர்கள் சிறிய காரிலும் செல்லவேண்டும்' என்று கூறிவிட்டார்கள்.

" இப்பொழுது அரசாங்கத்திடம் உள்ள பெரிய ஆடம்பரக் கார்களெல்லாம், வெளிநாட்டுக்காரர்கள் இங்கு வரும்போது அவர்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன; அதுவும், அந்தக் கார்கள் இருக்கும் வரைதான்! அதன் பிறகு அவற்றைப்போல் பெரிய கார்கள் வாங்கப்படமாட்டாது!

" அமைச்சர்களாக உள்ள எங்களையெல்லாம், 'தலைவர்கள்' என்று கழகத் தோழர்கள் அழைத்தாலும், நாங்களெல்லாம், தொண்டர்களின் தோழர்கள்—தொண்டருக்குத் தொண்டர்!

" உங்களோடு சேர்ந்து பழகியவர்கள் நாங்கள்! நாங்கள் காரிலே சென்றாலும், ஏழை எளியவர்களின்—தொழிலாளர்களின் நிலை பற்றிய எண்ணம்தான் எங்களுக்கு இருக்கும்"

என்று, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், 30—7—67 அன்று சென்னை 94-வது வட்டத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சோவியத் நாட்டுக்குச் சென்று திரும்பிய மேயர் குழுவினருக்குப் பாராட்டுத் தெரிவிப்பதற்காக நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில், மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., சிற்றுளி சுப்பிரமணியம், முன்னாள் மேயர் சிட்டிபாபு, துணை மேயர் இரா. சடகோபன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

மேயர் இரா. சம்பந்தம், பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அமைச்சர் அவாகள் தமது உரையில், கழகம் ஆளும் பொறுப் பேற்றதிலிருந்து இன்றுவரை புரிந்துள்ள சாதனைகளை மிக விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அந்த உரையின் சுருக்கம் வருமாறு:—

" கடந்த ஆறு மாத காலத்தில் நமது ஆட்சி, தேர்தல் கால வாக்குறுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக—ஆனால் நிச்சயமாக நிறைவேற்றி வந்திருக்கிறது. 'ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்போம்' என்றோம்—அதன்படி, சென்னையிலும், கோவையிலும் கொடுத்து வருகிறோம்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்திருக்கிறார் — ஆகஸ்டு 15-ம் நாள்முதல் சென்னை நகரத்தின் சுற்றுப்புறப் பகுதிகளிலும், கோவையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் படி அரிசி வழங்குவது பற்றி!

அடுத்தபடி ஆங்காங்கே—எங்கெங்கு குடும்பக் கார்டு இருக்கிறதோ அங்கெல்லாம் அதைப் பரப்பத் திட்டமிட்டுள்ளோம்.

(4-ம் பக்கம் பார்க்க)

சீரிய நோக்கத்தோடு துவக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம்

சீர்கெட்டுப் போனதற்குக் காங்கிரசுக்காரர்களே காரணம்

வி. டி. அண்ணாமலை குற்றச்சாட்டு

சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் வி. டி. அண்ணாமலை (பெரணமல்லூர்) கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைமீது கருத்தறிவித்துப் பேசியதாவது:—

"கூட்டுறவு மானியத்தில் தற்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு தேவையான நிதியை ஒதுக்கியிருக்கிறது.

கூட்டுறவு இயக்கம் 1904-ல் முதன் முதலில், கிராம மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இன்று ஒரு பக்கத்தில் பெரு முதலாளிகள்—பெரும் பணக்காரர்கள், கிராமத்திலே இருக்கின்ற மக்களைச் சுரண்டிக் கொண்டிருப்பதால், கிராம மக்கள் தவிக்கிறார்கள்.

சென்ற இருபது ஆண்டுகளாகக் கூட்டுறவு இயக்கம், ஏதோ ஒரு காரணத்தினால்—சூழ்நிலை காரணமாக—சில பெரியவர்களிடத்திலே சென்று அடைந்தது; அதன் காரணமாக, கூட்டுறவு இயக்கத்தை அவர்கள் சொந்த வீட்டு இயக்கமாக மாற்றிவிட்டார்கள்.

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கொள்ளை அடிப்பதாகக் கூறப்பட்டதைப்போலத்தான், கூட்டுறவு இயக்கத்தின் பணம் அவர்களுடைய சொந்த வாழ்க்கை நலனுக்கு உதவியது; அதனால் கூட்டுறவு நசிந்தது.

கூட்டுறவு இயக்கம் தூய்மையான இயக்கம்; அதை வளர்க்கவேண்டியது அவசியம். தன்னலமற்ற சேவை செய்யக்கூடிய தியாகிகள் கூட்டுறவு இயக்கத்தில் இருந்தால்—இந்த நேரத்தில்கூட-கூட்டுறவு இயக்கம் நல்ல பயனைக் கொடுக்கக் கூடும்.

ஆனால், சென்ற இருபது ஆண்டுகளாக இருந்த பெரிய பெரிய அதிகாரிகள் — ரிஜிஸ்திரார் போன்று இருக்கிறவர்கள்—பணத்தைச் சம்பளமாகப் பெறுகிறார்களே தவிர, தாங்கள் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறிவிட்டார்கள். குற்றம் கண்டபோது அவர்களைத் தண்டித்திருக்க வேண்டும்; ஆனால், செய்யவில்லை. அதை மன்னித்து விடுவோம்.

குற்றம் செய்தவர்களைத் திருத்தியாவது இருக்கவேண்டும்; அதுவும் செய்யவில்லை.

பெரிய அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்றால், கூட்டுறவு இயக்கத்தில் தவறு இழைத்தவர்களோடு கூடிக் குலவினார்கள். எனவேதான், கூட்டுறவு இயக்கம் நசித்து, இந்தநேரத்தில் இவ்வளவு சீர்கேடு அடையும் நிலையில் ஆகிவிட்டது.

கூட்டுறவு இயக்கம் நசித்தால் விவசாயிகளினுடைய வாழ்க்கையே பாழாகிவிடும்.

கிராம விவசாயிகளுக்கு நாம் எதை எதையோ செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

காலஞ்சென்ற தலைமையமைச்சர் நேரு அவர்கள்கூட, 'கூட்டுறவு இயக்கம் மிகமிக முக்கியமானது; கிராமங்கள் செழிப்படைய வேண்டுமானால்—கூட்டுறவு இயக்கம், பஞ்சாயத்து இவைகளெல்லாம் தேவையானவைகளாகும்' என்று கூறியுள்ளார்.

மாமேதைகளெல்லாம் உயர்வாகக் கூறியிருக்கும் இந்த இயக்கத்தைப் பாழடையச் செய்யவைத்த பெருமை, தமிழகத்தில் காங்கிரசுக்காரர்களைத்தான் சேரும்.

சீர்கெட்டிருக்கும் இந்தக் கூட்டுறவு இயக்கத்தை நாமெல்லாம் சேர்ந்து சீர்திருத்த வேண்டும். இந்த நேரத்திலாவது, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்களும், மற்றும் காங்கிரசுத் தோழர்களும் நமக்கு உறுதுணையாக இருந்தால், கூட்டுறவு இயக்கம் சீரடைய முடியும். அதன் மூலம் கிராமத்தில் இருக்கக்கூடிய உழவர் பெருமக்கள் வாழ்வில் நல்ல மலர்ச்சி காண முடியும்.

கிராமங்களில் யார் பணம் கொடுக்கிறார்கள்?—லேவாதேவிச் சட்டப்படி கிராமங்களில் பணக்காரர்கள் பணம் கொடுப்பதில்லை. அங்கு பாங்கிகள் இல்லை.

கிராமங்களில் விவசாயம் பெருக வேண்டுமென்றால் வயலுக்குத் தண்ணீர் பாய்வதைப்போல் விவசாயிகளுக்குப் பணம் பாய வேண்டும்; அப்பொழுதுதான் விவசாயத்தைச் செவ்வனே செய்ய அவர்களால் முடியும். அந்த நிலையில் விவசாயிக்குப் பணம் கொடுக்கக் கிராமத்தில் யார் இருக்கிறார்கள்?

இங்கிருந்து கொண்டு, தமிழகத்திலிருக்கும் கிராமப்புறங்களில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களை, 'வெள்ளாமையைப் பெருக்குங்கள்; உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்யுங்கள்' என்று சொல்லுவதனால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாது!

கிராம உழவர்களுக்குத் தேவையான பணம்—உடலில் ஓடிக் கொண்டிருக்கிற இரத்தம் போல்—அவர்களிடம் புழங்கிக் கொண்டிருக்க வேண்டும். இரத்த ஓட்டம்போல் பணம் இருந்தால்தானே விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க முடியும்?

விவசாயிகளிடம் பணம் புழங்கச் செய்தால், அவர்கள் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கத் தயாராக இருக்கிறார்கள். இந்த நிலையை, எல்லோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

விவசாயம் பெருக வேண்டுமானால், கூட்டுறவு இயக்கத்தை நாம் சீர்படுத்தவேண்டும். இந்த வகையில், தமிழகத்தில் உள்ள மத்திய கூட்டுறவு நில அடமான பாங்கி நமக்குப் பெரிய சேவை செய்துவருகிறது.

மத்திய நில அடமான பாங்கி சென்னையிலே இருந்துகொண்டு பல கிளை அடமான பாங்கிகளை ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒன்றாக ஏற்படுத்தியிருக்கிறது; அது மட்டும் போதாது.

உதாரணமாக, வந்தவாசி தாலுகாவில் 220 கிராமங்கள் இருக்கின்றன என்றால், இன்னும் 20 கிராமங்களில் கூட்டுறவு நில அடமான பாங்கியின் நிழல் கூடப் படவில்லை. தீண்டப்படாத கிராமங்களாக 20 கிராமங்கள் இருக்கின்றன.

இத்தனை ஆண்டுகளாகியும்—கூட்டுறவு இயக்கம் ஆரம்பித்து 64 ஆண்டுகள் ஆகியும்—கூட்டுறவு நில அடமான பாங்கியின் சாயை அந்த 20 கிராமங்களில் படவில்லையென்றால், அதற்குக் காரணம் 'ஏரியா ஆப் ஆபரேஷன்' என்று சொல்லுகிறோமே—அது, அதிகம் என்றுதான் சொல்ல முடியும்.

பிர்க்காவிற்கு ஒரு பாங்கி ஒரு வீதம் அமைக்க வேண்டும். நில அடமான பாங்கியிலே இருக்கும் சிப்பந்திகளைப் பொறுத்தவரையில், அவர்களை 'ப்ரொவின்ஷியலைசேஷன் ஆப் தி ஸ்டாப்' என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும்.

கூட்டுறவு நில அடமான பாங்கிகள் பழைய கடன்களைத் திருப்பிக் கட்டினால்தான், மேலும் கடன் கொடுக்கலாம் என்றும், கடனைத் திருப்பிக் கட்டாவிட்டால் கடன் கொடுக்கக்கூடாது என்றும் ரிசர்வ் பாங்கியினர் கூறுகிறார்கள்.

கூட்டுறவு இயக்கம் வேறு—ரிசர்வ் பாங்கி வேறு. ரிசர்வ் பாங்கி நமக்கு வழிவகை சொல்லுவதில், கூட்டுறவு இயக்கத்தை அனுசரித்துத்தான் சொல்லவேண்டும்.

பிரதம நில அடமான பாங்கிகள், விவசாயிகள் கோருகின்ற கடன்களை—முன் கடன்களைத் தீர்ப்பதற்காக இருந்தாலும்—கொடுத்தால்தான், அவர்கள் மனம் தூய்மை அடையும்; மனம் தூய்மை அடைந்தால் வாழ்க்கை இன்பம் அடையும்; பிறகு அவர்கள் நிம்மதியாக விவசாயம் செய்து, நிலத்திலே உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

முன் கடன், அவசியம் தீர்க்கப்பட வேண்டும். எந்தக் காரணத்திற்காக ஏற்பட்ட கடனாக இருந்தாலும், பிரதம நில அடமான பாங்கி அதைக் கொடுக்க வேண்டும்.

"எந்தக் காரணத்திற்காகக் கடன் கேட்டாலும் கொடுக்க வேண்டும்" என்ற வகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்."

ஜின்னாவின் சொத்துக்கள்

வாரிசு யார்?

கராச்சி, ஜூலை 30—

பாகிஸ்தானை உருவாக்கிய ஜின்னாவுக்குப் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் மேற்கு பாகிஸ்தானில் இருப்பதாக 'ஜங்' என்னும் கராச்சி இதழ், செய்தி ஒன்று வெளியிட்டிருக்கிறது.

ஜின்னாவின் சகோதரி பாத்திமா ஜின்னா இறந்துவிட்டதால், அந்தச் சொத்துக்களின் நிர்வாகம் இப்பொழுது ஆபத்துக் கட்டத்தில் இருப்பதாக அவ்விதழ் கூறியிருக்கிறது.

கட்டாயக் கருத்தடைச் சட்டம்

'அடிப்படை உரிமைகளுக்கு முரணல்ல' என நம்பிக்கை

புதுடில்லி, ஜூலை 31—

குழந்தை பிறப்பதைக் குறைப்பதற்கான கட்டாய அறுவை சிகிச்சைச் சட்டத்தை மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர், சட்ட நுணுக்கம் பற்றிக் கருத்தறிய மத்திய சட்ட அமைச்சகத்துக்கு அனுப்பியுள்ளார்.

"அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைக் கட்டாய அறுவைச் சிகிச்சை சட்டம் மீறுவதாக இருக்காது,' என்று அமைச்சர் உறுதியாக நம்புகிறார்.

மேற்படி சட்டத்தை அமுல்படுத்துவதற்கான முறை பற்றி நிபுணர்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை; எனினும், கட்டாய அறுவைச் சிகிச்சைச் சட்டத்தை மீறுகிறவர்களுக்கு அபராதம்தான் விதிக்க வேண்டுமே தவிர, சிறைக்கு அனுப்பக்கூடாது'என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மூன்று குழந்தைகளுக்குமேல் உள்ளவர்களுக்கு மருத்துவ வசதி—வீட்டு அலவன்சு போன்ற பல்வேறு வசதிகளை மறுப்பதன் மூலம் மத்திய அரசும், மாநில அரசுகளும் அச்சட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

"வெளிநாட்டிலிருந்து ஏதாவது உதவி கிடைக்காவிட்டால் மத்திய அரசினால் பெரும் அளவில் அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாது" என்றும் கருதப்படுகிறது; எனினும், சட்டம் நிறைவேற்றப்படுகின்றவரையில், அவ்வித உதவிபெற நடவடிக்கை எதுவும் எடுக்கப்படும என்று தோன்றவில்லை.

நகராட்சி ஊழியர்கட்குப் 'பென்ஷன்' தரவேண்டும்

திருச்சியை ஒரு மாநகராட்சி ஆக்குக!

திருச்சி ஆர். நாகசுந்தரம் கோரிக்கை

சட்டமன்றத்தில் உள்ளாட்சிமன்றத்துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் திருச்சி ஆர். நாகசுந்தரம் கலந்துகொண்டு தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:—

மதுரை, கோவை போன்ற நகராட்சிகளில் புதை சாக்கடைத் திட்டம் நீண்ட நாட்களாக அமுலில் இருக்கிறது. மத்தியிலும், மாநிலத்திலும், நகராட்சியிலும் காங்கிரசு ஆட்சி இருந்தும்கூட திருச்சி நகரத்தில் புதை சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்படாத நிலையே இருந்தது. அன்புகூர்ந்து நம்முடைய அரசாவது, வளர்ந்து வரக்கூடிய தொழில் நகரங்களை அடுத்துப் பெற்றிருக்கின்ற திருச்சி நகரத்தில், புதை சாக்கடைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

திருச்சியை அடுத்துள்ள கனரகக் கொதிகலன் தொழிற்சாலை இருக்கும் பகுதி—எஞ்சினீயரிங் கல்லூரி — தொழிற்பேட்டைகள்—துப்பாக்கித் தொழிற்சாலை ஆகியவற்றையெல்லாம் இணைத்து திருச்சியை ஒரு மாநகராட்சியாக ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொன்மலைப்பட்டி பஞ்சாயத்தையும்—பொன்மலை இரயில்வே காலனியையும் சேர்த்து தனி நகராட்சியாக அமைக்க வேண்டும்.

திருச்சி நகரில் உள்ள நெடுஞ்சாலைகளில் ஒரே ஒரு சாலை மிகவும் நெருக்கடி மிகுந்த சாலை. அந்தச் சாலையில் ஜங்ஷன் அருகே—இரயில்வே லெவல் கிராசிங் இருக்கிறது; அது பல விதத்திலும் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கிறது. அன்புகூர்ந்து அந்த லெவல் கிராசிங்கை மாற்றி மேம்பாலம் கட்ட மத்திய அரசுக்கு நம் மாநில அரசு சிபாரிசு செய்ய வேண்டும்.

இப்போது நகராட்சிகளின் வார்டுகள், திருத்தியமைக்கப்படாத நிலையிலேயே உள்ளன; எல்லைகளை நிர்ணயிக்கும் வகையில் அவைகளை மாற்றியமைக்க வேண்டும்.

சட்டமன்றத்தைப் போல்—நாடாளுமன்றத்தைப்போல், நகராட்சியிலும் பெண்களுக்காகவும் தனித் தனித் தொகுதி ஏற்படுத்த வேண்டும்.

நகராட்சித் தலைவர்களும், பெரும்பாலான உறுப்பினர்களும் காங்கிரசுக்காரர்களாக இருந்த காரணத்தினால், நகராட்சியில் பல இடங்களைக் குத்தகைக்குப் பெற்று—குத்தகை நிலங்களை உள் வாடகைக்குத் தரக்கூடாது என்ற விதி இருந்தும்—அந்த இடங்களையெல்லாம் உள்குத்தகைக்கு விட்டு வாடகை சம்பாதிக்கிறார்கள்.

தமிழ் நாட்டில், நகராட்சிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இன்று 'பென்ஷன்' இருக்கிறது. அதேசமயத்தில் ஆணையருக்கும், பொறியாளர்களுக்கும், நலத் துறை அலுவலர்களுக்கும் 1-4-62 முதல் 'பென்ஷன்' இருக்கிறது. மற்றச் சிப்பந்திகளுக்குப் 'பென்ஷன்' இல்லை. அவர்கள் தங்கள் முக்கால் பகுதி வாழ்க்கையைச் சாறுகப் பிழிந்துவிட்டு, இப்போது 'பென்ஷன்' இல்லாமல் வாடுகிறார்கள்.

இரயில்வேயில், அண்மையில், 1957-ம் ஆண்டுக்குமுன் ஓய்வு பெற்றவர்களுக்குக்கூட மத்திய அரசு 'பென்ஷன்' வழங்குகிறது.

அரசாங்கத்தில் ஒரு பணியும் புரியாதவர்களுக்குக்கூட நம் அரசு 'முதியோர் பென்ஷன்' என்ற பெயரில் ஊதியம் கொடுத்து வருகிறது. ஆகவே, நகராட்சி சிப்பந்திகளுக்கும்—1962-க்கு முன்னால் பணியாற்றிய வர்களுக்கும் கூடக் கிடைக்கும்விதத்தில் பென்ஷன் தரப்படவேண்டும்.

பொன்மலை நகரப் பஞ்சாயத்தில் பொன்மலை இரயில்வே காலனியைச் சார்ந்த நீர்த்தேக்கம் இருக்கிறது. அந்த நீர்த்தேக்கத்துக்குக் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிறது; ஆனால் பொன்மலைப்பட்டியைச் சேர்ந்த நீர்த்தேக்கம், அதற்கு 25 கெச தூரத்தில்தான் இருக்கிறது; அது தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறது; காரணம், கிணறுகள் பாறைகளாக இருப்பதுதான்; ஆனால் இந்த நீர்த்தேக்கத்திலிருந்துதான் அதற்குத் தண்ணீர் வரவேண்டும். இலவசமாகக்கூட அல்ல—மீட்டர் அளவு முறையில் வேண்டுமென்று அந்தப் பஞ்சாயத்து கேட்டும்கூட, எந்தப் பகுதியில் இந்த நீர்த்தேக்கம் இருக்கிறதோ—எந்தப் பஞ்சாயத்தில் அதிகமான இரயில்வேத் தொழிலாளர்கள் இருக்கிறார்களோ—அந்தப் பஞ்சாயத்து நீர்த்தேக்கத்துக்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டும், மத்திய அரசு, தர மறுக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் நம்பியார் அவர்களும், பொன்மலை நகரப் பஞ்சாயத்துத் தலைவர் திரு. இராமானுசம் அவர்களும் இரயில்வே அமைச்சரைப் பேட்டி கண்டு இது குறித்து வற்புறுத்தியிருக்கின்றனர்; நம் அரசும் இதற்குச் சிபாரிசு செய்யவேண்டும்.

திருச்சி நகராட்சியிலிருந்து மத்திய சிறைக்கு தண்ணீர் போகிறது; போகும் வழியில் உள்ள உலகநாதபுரம், சுப்பிரமணியபுரம் பகுதிகளுக்கும், பொன்மலைப்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த பகுதிகளுக்கும் 10 பொதுக் குழாய்கள் மூலம் தண்ணீர் தர வேண்டும்; அவர்கள், தனிப்பட்ட டி. வி. எஸ். நிறுவனத்திற்குத் தண்ணீர் தருகிறார்கள்.

திருச்சியில், 'டிஸ்டிலரிஸ்' என்ற ஒரு ஆல்ககால் தொழிற்சாலை இருக்கிறது; அதிலுள்ள கழிவுத் தண்ணீர் அருகில் உள்ள உய்யக்கொண்டான் ஆற்றில் விடப்பட்டு தண்ணீர் கறுப்பாக இருக்கிறது. இரண்டு பக்கங்களிலுள்ள பயிரும் தீய்கிறது; ஆடுமாடுகள் அந்தத் தண்ணீரை குடிக்க முடிவதில்லை; அதிலிருந்து நாற்றம் வருகிறது. அந்தத் துர்நாற்றம் இரண்டு மூன்று மைல்கள் அளவிற்கு நகரத்திற்குப் பரவுகிறது.

எல்லாப் பொது நிறுவனங்களும் அதை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டுமெனக்கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றிருக்கின்றன. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் இரண்டும் அதை எடுத்துவிடவேண்டுமென்று—அனுமதி மறுத்து அனுப்பியிருந்தும் முந்திய ஆட்சியாளர்கள் அதற்கு எப்படியோ அனுமதி தந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த கழிவுத் தண்ணீரை வேறு எங்கேயாவது விட்டுவிட உத்தரவு பிறப்பித்து அந்தத் துர்நாற்றத்தைப் போக்கி—அங்கு நல்ல சுகாதாரம் நிலவச் செய்யவேண்டும்.

நம் தலைநகர் பற்றி ஒரு வார்த்தை. கூவம் ஆற்றில்பழைய காலத்தில் பச்சையப்ப (முதலியார்) அவர்கள் தமது பரிவாரங்களோடு அங்கு வந்து குளித்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அப்பேர்ப்பட்ட கூவம் ஆறு, இன்று நாற்றம் பிடித்த ஆறாக இருக்கிறது. மருத்துவமனையிலிருந்தும், மத்திய சிறைக்கூடத்திலிருந்தும் கழிவுநீர் சேருவதால், இந்த நாற்றம் ஏற்படுகிறது. மாநிலத்திலும் மாநகராட்சியிலும் நம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிற இந்த நேரத்தில், அந்தக் கழிவு நீரைத் தனிக் குழாய்கள் மூலம் சூயேஜுக்குகொண்டுபோய் கூவம் ஆற்றைத் தூர் எடுத்து, பழைய படி பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் செப்பனிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

தொழிலாளர் தெரிவித்த கோரிக்கை...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இப்பொழுது புன்செய் நிலத்திற்கு வரி இல்லாமல் செய்திருக்கிறோம்! நில வரி நீக்கம் ஆராயப்பட்டு வருகிறது!

பக்தவத்சலம் சொல்கிறார்—'நாங்கள் வந்திருந்தால் நிலத்திற்கு வரியே இருந்திருக்காது' என்று! அதைத்தான் இருபது ஆண்டுகளாகப் பார்த்தோமே—அவர்கள் அரசாண்ட இலட்சணத்தை!

நீங்கள் இருந்தபோதும் செய்யவில்லை; வந்தாலும் செய்யமாட்டீர்கள் என்றெண்ணித்தான், 'கொஞ்சகாலம் வீட்டிலே தூங்குங்கள்' என்று உங்களைத் தூங்க வைத்துவிட்டார்கள் மக்கள்!

'நாங்கள் வந்திருந்தால் இலவசக் கல்வியளித்திருப்போம்' என்று மேலும் சொல்லுகிறார் அவர்! தமிழ்நாட்டின் நல்லகாலம்—வரவில்லை!

இப்பொழுது இலவசக் கல்வித் திட்டத்தைப் புகுமுக வகுப்பு வரை ஏற்பாடு செய்துள்ளோம் நாங்கள்! யார் இயலாதவர்களோ-யார் முடியாதவர்களோ—யார் பணம் செலவழித்துப் படிக்க இயலாத நிலையில் இருக்கிறார்களோ — அவர்களுக்கெல்லாம் இலவசக் கல்வியைத் தி. மு. கழகம் ஆறுமாத காலத்தில் உருவாக்கியிருக்கிறது!

'எதிர்பாராத அளவுக்கு இவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்களே' என்று எரிச்சல்கொண்டு—அதுவும் 'சென்னையிலே 12 இடங்களையும் கைப்பற்றிவிட்டார்களே' என்று பரதவித்து, 'இதற்குக் காரணம், குடிசைப் பகுதிகளில வாழும் பாட்டாளி மக்களல்லவா? குடிசை இருப்பதால் தானே அவர்கள் இருக்கிறார்கள்?' என்றெண்ணி, பஞ்சமா பாதகத்திலும் படுபயங்கரமாகத் தீ மூட்டிவிட்டார்களே பாவிகள்!

அவர்களின் பாவச்செயலைப் போக்க ரூ. 10 இலட்சம் நிதி திரட்டி, எங்தெந்த வீடுகள் தீப்பற்றினவோ அந்த வீடுகளுக்குப் பதில், 5 ஆண்டுகளில் தீயால்—வெள்ளத்தால் பாதிக்கப்படாத வீடுகளைக் கட்ட முயற்சி எடுத்து வருகிறோம்.

நீங்கள் மயிலாப்பூர் பகுதியிலும், தியாகராயநகர்ப் பகுதியிலும் சென்று பார்த்தால் இக்காட்சியைக் காணலாம்!

சாதி ஒழிய வேண்டுமென்பதை வாயால் சொன்னால் மட்டும் போதாது! யார் யார் கலப்பு மணம் செய்கிறார்களோ அவர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கத் தி. மு. கழக அரசு திட்டமிட்டிருக்கிறது!

'சுயமரியாதைத் திருமணச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள்' என்று காங்கிரசை ஆதரித்த பெரியாரும், நாங்களும் முன்பு கூறினோம்.

'காங்கிரசு அமைச்சர்களே! உங்களை ஆதரிக்கும் பெரியார்கூட சுயமரியாதைத் திருமணச் சட்டம் செய்யச் சொல்கிறார்களே—செய்யுங்கள்' என்று அந்த நேரத்தில் நாங்கள் சொன்னபோது, 'முடியாதுபோ' என்று—மேனகையைப் பார்த்து விசுவாமித்திரர் சொன்னதுபோல--எங்களைப் பார்க்க முடியாமல் கையால் தங்கள் கண்களை மறைத்துக் சொண்டார்கள்!

சங்கரலிங்கனாரைத் தியாகம் செய்து—தமிழ்ச் சிங்கங்களின் அங்கங்களைத் தந்து, 'தமிழ்நாடு என்று பெயர் வையுங்கள்' என்றோம்! அதற்கு அவர்கள் தந்த பரிசு—அழிக்கப்பட்ட மஞ்சள், குங்குமம்! அவிழ்க்கப்பட்ட கூந்தல்! பறிக்கப்பட்ட மலர்கள்! அறுத்து வீசப்பட்ட தாலிகள்!

ஆனால் இப்பொழுது, 'தமிழ்நாடு' பெயர் வைப்புத் தீர்மானத்தை நிறைவேற்றி, சட்டமன்ற அவைத் தலைவர் அனுமதியுடன் முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'தமிழ்நாடு' என்று சட்டமன்றத்தில் சொல்ல, 'வாழ்க' என்று நாங்கள் கூறினோம்!

காமராசர் காலத்தில் இப்படிச் சொல்லியிருப்பாரா? பக்தவத்சலம்தான் சொல்ல நினைத்திருப்பாரா? சொன்னால் அவர் பெருமை என்னுவது?

1947-ம் ஆண்டில் ஆளுங் கட்சியாகக் காங்கிரசு அமர்ந்த நேரத்தில், பஸ் தொழிலைத் தேசியமயமாக்க அதற்கான வழிவகைகளை வகுத்தார்கள்; ஆனால் செய்யவில்லை! இங்கொன்றும் அங்கொன்றுமாகச் செய்து 120 மைலைத் தேசியமயமாக்கினார்கள். ஆனால் அதே வழியாக அரசினர் பஸ்சும் போகும்—தனியார் பஸ்சும் போகும்!

இப்பொழுது, 'தனியாருக்குள்ள அனுமதி முடிந்துவிட்டால் அந்த வழிகளில் அரசாங்க பஸ்தான் போகும்' என்று சட்டம் கொண்டுவந்திருக்கிறோம்! அதிலும், 75 மைலைத் தேசியமயமாக்கியிருக்கிறோம்!

இதற்குப் பெயர் தேசியமயமா? அல்லது 'அதுவும் போகும்—இதுவும் போகும்' என்பது தேசியமயமா?

ஆகவேதான், முழுமையான தேசியமயக் கொள்கையைப் படிப்படியாக வெகு தீவிரமாகக் கொண்டுவருகிறோம்!

1964-ம் ஆண்டில் சென்னை நகரில் பஸ் தொழிலாளர்கள் போராட்டம் நடைபெற்றது; அதில் 11 பேர் பழிவாங்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பெற்றனர். இரண்டாண்டுக் காலம் கதறினார்கள்—'வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கண்ணீர் வடித்தார்கள்—பலனில்லை!

ஆனால் தி. மு. கழகம் பதவியேற்றதும், அறிஞர் அண்ணா அவர்களின் ஆணையின்படி மே தினம் விடுமுறை நாளாக மாற்றப்பட்டது—அந்த நாளில் முதன் முதலாக நான் 'பைலி'ல் கையெழுத்துப் போட்டது, வேலையிழந்த 11 பேருக்கும் வேலைக்கு உத்தரவிட்டதுதான்!

இதற்குப் பெயர் தொழிலாளர் அரசா? அதற்குப் பெயர் தொழிலாளர் அரசா?

அவர்கள் நினைத்திருந்தால் செய்திருக்கலாம்; ஆனால், ஆணவம் அவர்கள் அறிவுக்கண்ணை மறைத்தது; தொழிலாளர்கள் நம்மைப் பார்த்துக் கேட்பதா? ஆள்வதற்காகத்தான் நாம் பிறந்தோம் — ஆணையிடுவதற்காகத்தான் ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்டோம்' என்ற அதிகாரத் திமிரோடு இருந்தார்கள்!

காங்கிரசு ஆண்டபோது தொழிலாளர்கள் மந்திரிகளிடம் ஓடிக் குறைகளைக் கூறுவார்கள்; அதுவும் தீர்க்கப்படமாட்டாது! ஆனால் நாங்கள், தொழிலாளரிடம்சென்று அவர்கள் பக்கத்தில் நின்று குறைகளைக் கேட்டறிகிறோம்!"

சீரணிப்படை அமைப்புத்திட்டம் தயார்

சென்னையில் இத்திங்கள் துவக்கம்

திருச்சி, ஜூலை 31—

தமிழகத்தில் அமையவிருக்கும் சீரணிப் படையின் அமைப்பு முறை குறித்து நகல் திட்டமொன்று தயாராகி விட்டதாகவும், இது, முதலமைச்சர் அண்ணா அவர்களின் ஒப்புதலுக்குக் காத்திருப்பதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இத்திட்டம், முதலில், சென்னை மாவட்டத்தில் ஆகஸ்டு மத்தியில் துவங்கப்படவிருக்கிறது; அடுத்து செங்கற்பட்டு மாவட்டத்திலும், பிறகு படிப்படியாக எல்லா மாவட்டங்களிலும் அமுலாகும்.

துவக்க வேலைகள்—சீரணிப் படைக்கு கவனமாக உறுப்பினர்களைச் சேர்த்தல் போன்றவை—திட்டம் செயல்படுத்தப்படுவதற்குமுன் ஒழுங்காக முடிக்கப்பட வேண்டும்.

இப்பொழுது, ஒவ்வொரு மாவட்டச் சீரணிப் படையிலும் ஆயிரம் பேர்களைச் சேர்ப்பது என்று குறிக்கோள் வைக்கப்பட்டிருப்பினும், மக்களிடை இதற்குத் தகுந்த வரவேற்பு இருக்குமானால் இந்த எண்ணிக்கை சில மாவட்டங்களில் அதிகமாக்கப் படலாம் என்றும் கருதப்படுகிறது.

பல மாவட்டங்களிலும் இத்திட்டத்திற்குப் பெருவாரியான வரவேற்பு கிடைத்துவருகிறது.

சமுதாயத்துக்குப் பெரிய அளவில் தொண்டாற்றுவது என்பதே சீரணிப் படையின் குறிக்கோளாக இருப்பதால், தொழிலாளர்கள்—மாணவர்கள்—படித்தவர்கள்—பணக்காரர்கள் ஆகிய பலதரப்பட்டவர்களும் இப்படையில் சேர்க்கப்படுவர். இவர்களின் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காக இவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்படுவர்.

உதாரணமாக, குளம் ஒன்று தூர் எடுக்கவேண்டுமென்றால் அப்பணி தொழிலாளர்கள்—உழவர்கள் அடங்கிய குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

கல்வி, மற்றும் பண உதவி தேவைப்படும் சேரி சீர்திருத்தம் போன்றவை, மாணவர்கள் மற்றும் பொருளாதார வசதிபடைத்தவர்களின் குழுவிடம் ஒப்படைக்கப்படலாம்.

இக்குழுக்கள் அரசாங்கத்தின் பலதரப்பட்ட திட்டங்கள் வெற்றியடையும் பொருட்டு மக்களிடம் பிரசாரம் செய்வதிலும் ஈடுபடும்.

இப்போதைய திட்டப்படி, ஒவ்வொரு படைக்கும் மாவட்ட மட்டத்தில் அதிகாரப்பற்றற்ற தலைவர் ஒருவர் இருப்பார். இதுபோல், ஒவ்வொரு ரெவினியூ டிவிஷனுக்கும், ஒவ்வொரு குழுத் தலைவரும் இருப்பார்.

இரண்டு அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு தடவை மாவட்ட மட்டத்திலும், பகுதி அளவிலும் இவைகள் கூடி, அதுவரை செய்யப்பட்ட பணிகளின் வெற்றி குறித்தும், மேற்கொண்டு செய்யப்படவேண்டிய பணிகள் குறித்தும் விவாதித்து ஆராயும்.

ஆகஸ்டு 16, அல்லது 17-ம் நாள் சென்னை மாவட்டச் சீரணிப் படையை முதலமைச்சர் அண்ணாஅவர்கள் துவக்கிவைக்கக்கூடும். சென்னை மாவட்டச் சீரணிப்படையில் 1000பேருக்கு மேல் இருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெங்களூரில் கழகக் கூட்டங்கள்

பெங்களூரில் நடைபெறவிருக்கும் கழகப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளவிருக்கும் சொற்பொழிவாளர்களும்—இடங்களும்:—

ஆகஸ்டு

5 : **வி. எஸ். கோவிந்தராசன்** எம். எல். ஏ. — கோபாலபுரம் எம். ஜி. ஆர் மன்றம்

13 : **சின்னசாமி** எம். எல். ஏ. — ரிசால்தார்நகர்

20 : முன்னாள் போலீசு ஊழியர் **கண்ணன்**--இராமச்சந்திரபுரம்

26, 27 : **பெ. சீனிவாசன்** எம்.ஏ. சிக்லால்பாக் (கிலாரி ரோடு)

செப்.

2 : **சி. சிட்டிபாபு** எம்.பி. — இடம் பின்னர்

3 : அமைச்சர் **முத்துசாமி** — யசவந்தபுரம்

7 : மதுரை **எஸ். முத்து** எம்.எல்.சி.—சூபர் டாக்கீஸ்

9, 10 : **க. அன்பழகன்** எம்.பி.—டாஸ்கர் டவுன, சுதந்திர நகர்

23 : ஈரோடு **சின்னசாமி** எம்.எல்.ஏ.—இடம் பின்னர்

24 : **பி. ஏ. சாமிநாதன்** எம்.பி.—இடம் பின்னர்

அமைச்சர் மு. கருணாநிதி

"அக்டோபர் திங்கள் முதல்நாள் பெங்களூரில் நடைபெறும் அண்ணா பிறந்த நாள் விழாக் கூட்டத்தில், தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்; இடம் பின்னர் அறிவிக்கப்படும்"

என கருநாடக மாநில தி. மு. க. அமைப்பாளர் தி. திராவிடமணி அறிவிக்கிறார்.

பெ. சீனிவாசன் கைதாகி விடுதலை

துலுக்கம்பட்டி சிமெண்டுத் தொழிற்சாலையில் நடந்துவரும் வேலை நிறுத்தம் தொடர்பாக, மேற்படி தொழிற்சங்கத்தின் தலைவரும் விருதுநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பெ. சீனிவாசனும், மற்றும் நால்வரும் கைது செய்யப்பட்டு, பின் பொறுப்பில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

படி அரிசித் திட்டம் விரிவாகிறது

ஆக. 15 முதல் மேலும் பல பகுதிகளில் அமுல்

சென்னை, ஜூலை 31—

"சென்னை நகரின் சுற்றுப்புறங்களிலும் ஆகஸ்டு 15-ம் நாள் முதல் ரூபாய்கு ஒரு படி அரிசி அளிக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது"

"கோவை நகரின் சுற்றுப்புறங்களுக்கு ரூபாய்க்குப் படி அரிசித் திட்டம் ஏற்கனவே விரிவுபடுத்தப்பட்டுள்ளது"

என்று, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் செய்தியாளர்களிடம் கூறினார்.

என அமைச்சர் கே.ஏ. மதியழகன் கூறினார்.

சென்னை நகரின் சுற்றுப்புறங்களில், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 47 சிற்றூர்கள் உள்ளன; மக்கள் தொகை 5,07,915; இங்கெல்லாம் குடும்பக் கார்டு திட்டம் நடைமுறையில் உள்ளது. இங்கு வழங்குவதற்கு 3,000 டன் அரிசி தேவைப்படும். இந்த அரிசியில் 90 சதவீதம் ரூபாய்க்கு 1 படி தரக்கூடிய வகை அரிசியாகும்.

சென்னை நகரைச் சுற்றி, ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கப்படவிருக்கும் இடங்களாவன:—

வடக்கே எண்ணூர்வரை—வடமேற்கே ஆவடிவரை—மேற்கே நந்தம்பாக்கம்வரை — தெற்கே தாம்பரத்தைத் தாண்டி பெருங்களத்தூர்வரை—தென் கிழக்கே திருவான்மியூர்வரை.

அண்ணா இல்லத்தில் வி.கே.கிருஷ்ணமேனன்

சென்னை, ஜூலை 31—

இன்று முதலமைச்சர் அண்ணா அவர்களை, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனன், அண்ணா அவர்களின் இல்லத்திற்குச் சென்று சந்தித்து இந்திய அரசியல் நிலை பற்றியும், வெளியுலக அரசியல் போக்கு பற்றியும் 15 நிமிடநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

கருணாநிதியுடன்:

நேற்றுக் காலை பொதுப்பணித் துறையமைச்சர் மு. கருணாநிதி அவர்களை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்துப் பேசினார்—திரு. கிருஷ்ணமேனன்.

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

நடக்க இருப்பவை

3--8--67

தாமல்

தி.மு.க. சார்பில் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்குப் பாராட்டு; மாலை 6-மணிக்கு தலைவர் : ஏ. எம். திருவேங்கடம்; பாராட்டுவோர் : சி. வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.. கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ., என்.கிருட்டினன் எம்,ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., எஸ். ஜே. இராமசாமி எம்.எல்.ஏ., வெ. சம்பந்தம், த. மு. கண்ணன், பி. முருகேசன், எஸ். முருகன், டி. முனுசாமி, மற்றும் பலர்.

பசுபதிபாளையம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு ; தலைவர் : பாலமுத்து; பேசுவோர் : என். வி. நடராசன் எம்.எல்.சி,, என். ஆர். இராமசாமி, ஆர். என். இராமசாமி, எஸ். நல்லசாமி, எஸ். நல்லசாமி (பெரியார் உணவு விடுதி), பரமத்தி சண்முகம், இரா. வைரப்பெருமாள் எம்.சி., பசுவை வேம்பரசு.

ஆவாரம்பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு; தலைவர் : என். கண்ணன்; பேசுவோர் : துரை முருகன் பி.ஏ., மா. பா. சாரதி எம்.எல்.ஏ., திருவேங்கடம் எம்.ஏ., எம். ஏ. செயவேல் பி.எஸ்சி., பி.எல். (இரவு 9-30 மணிக்கு மா. பா. சாரதி எம்.எல்.ஏ., தலைமையில் 'தூக்கு மேடை' நாடகம் நடைபெறும்.)

அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஆகஸ்டு

2 : மாலை 6 மணி : திருவத்திபுரம்—அனக்காவூர் ஊராட்சி ஒன்றியக் கட்டிடத் திறப்பு; இரவு 8 மணி : செய்யாறு—மின் துணை நிலையத் திறப்பு.

3 : காலை 8 மணி : வட ஆண்டப்பட்டு (கலசப்பாக்கம் தொகுதி)—ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 9 மணி: நூக்கம்பாடி—ஊராட்சி மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அடிக்கல் நாட்டல்; 10 மணி: கோவூர்—ஊராட்சி மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அடிக்கல் நாட்டல்; 11 மணி : துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; பகல் 12 மணி : முனியந்தல் — ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; மாலை 5-30 மணி : காஞ்சிபுரம் — நகராட்சி வரவேற்பு; இரவு 7 மணி : பொதுக் கூட்டம்.

4 : இரவு 7-45 மணி : கவரைப்பேட்டை (பொன்னேரி வட்டம்)—அரசினர் உயர்நிலைப் பள்ளி ஆரம்பித்தல்.

வெ. கண்ணன்

சுற்றுப்பயணம்

ஆக. 5 : சென்னை ; 6 : கோவை (2-வது வட்டம்); 7 : கரூர் ; 8 : சிவகிரி; 9 : சென்னிமலை; 10 : கோவை (11-வது வட்டம்); 11 : தாராபுரம்; 12 : பந்தநல்லூர் ; 13 : குடந்தை ; 14, 15, 16, 17 : ஈரோடு வட்டம் ; 19 : எண்ணூர் ; 20 : பெங்களூர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.